10/35/ 12/5/71 ⑤

செய்தி இதழாகப் பதிவு பெற்றது.

# தந்தி

**விசேஷ பதிப்பு**

University of Jaffna ... Periodicals Division ... Library

இல: 1208 1971 மே 7 வெள்ளிக்கிழமை ★ ★ ★ விலை சதம் 5

# ஒன்று சேர மீண்டும் முயற்சி

## சிதறிக் கிடக்கும் பயங்கர வாதிகள்

**தங்கள் கோஷ்டிகளில் இருந்து பிரிந்து பல திசைகளிலும் சிதறிப் பதுங்கி இருக்கும் பயங்கரவாதிகள் மீண்டும் ஒன்று திரள்வதற்கு முயற்சி செய்து வருகிறார்கள்.**

மொனருகலை மாவட்டத்தில் பயங்கரவாதிகளின் கேந்திர ஸ்தானமாகவிருந்த தோம்பகஹாவெலயில் இராணுவ முகாம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

வவுனியா, அநுராதபுரம் மாவட்டத்தில் உள்ள கும்புக்வேவ, மொனருகலை மாவட்டத்தில் உள்ள கல்பொக்க, வெள்ளவாயாப் பகுதிகளில் இரு பகுதியினருக்கும் மோதல் ஏற்பட்டது.

தோம்பகஹாவெலக் கூட்டுறவுச் சங்கம், வைத்தியசாலை ஆகியன இயங்கத் தொடங்கியுள்ளன. பஸ் சேவையும் நடைபெறுகின்றது.

### ஆயுதங்கள்

அநுராதபுரம், குருநாகல், கேகாலை, மொனருகலை, மாத்தறை மாவட்டங்களில் பாதுகாப்புப் படையினர் எதிர்த்துத் தாக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். பெருந் தொகையான பயங்கரவாதிகள் கைது செய்யப்பட்டு, ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

பயங்கரவாதிகள் பல இடங்களில் பொதுமக்களுக்கும், சொத்துக்களுக்கும் சேதம் விளைவித்துள்ளனர்.

### சூறையாடினர்

குருநாகலை மாவட்டத்தில் கும்புக்கே கிராம சபை, கிராம சேவகர் அலுவலகம், தபால் நிலையம் ஆகியவற்றை பயங்கரவாதிகள் நாசமாக்கினர். கேகாலை, குடுமுல்ல, கலத்தர கிராமங்களில் சூறையாடினர்.

காலி மாவட்டத்தில் உள்ள நவடகல கிராம மக்களையும் பயங்கரவாதிகள் தாக்கிப் பயமுறுத்தியுள்ளனர். (ஐ–15)

## பஸ் கட்டண உயர்வு பற்றி எந்த முடிவும் செய்யப்படவில்லை — அமைச்சர்

"பஸ் கட்டணங்களை உயர்த்துவது சம்பந்தமாக இதுவரை எதுவித முடிவும் எடுக்கவில்லை. அமைச்சரின் சம்மதத்துடன் பஸ் கட்டணங்களை உயர்த்துவது சம்பந்தமான அதிகாரங்களை இ. போ. ச. நிர்வாக சபைக்கு வழங்கவே இந்த மசோதா கொண்டு வரப்பட்டுள்ளது."

இவ்வாறு போக்குவரத்து அமைச்சர் திரு. லெஸ்லி குணவர்த்தன மோட்டார் போக்குவரத்துச் சட்டத்தின் கீழான மசோதாவைச் சபையில் சமர்ப்பித்துப் பேசும் போது சொன்னார்.

இம்மசோதா சபையில் அங்கீகரிக்கப்பட்டது.

சபை இம்மாதம் 21-ம் திகதி பிற்பகல் 2.00 மணிவரை ஒத்தி வைக்கப்பட்டது. (ஐ–6–12)

## மீனாட்சி



என்னுங்க, பயங்கர வாதிகள் பலர் அரசாங்கத்திட்டச் சரண் அடைஞ்சிட்டாங்களாமே?

ஆமாங்க, அவங்க அரசாங்கத்திட்டச் சரணடையாட்டா யமதர்மராஜனிட்டச் சரணடைய வேண்டி வந்திட்டா என்ன செய்யிறது எண்டு நினைச்சிட்டாங்கள் போலை-

## இருபதாயிரம் பேருக்கு அரசு வேலை வழங்கியது — உதவி அமைச்சர்

சுமார் 8000 பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதே எமது எண்ணமாகும். கடந்த ஒன்பது மாதங்களில் 20,221 பேருக்கு நாம் பல்வேறு துறைகளிலும் நியமனம் வழங்கி உள்ளோம்.

இவ்வாறு உதவி அமைச்சர் ரத்ன தேசப்பிரிய சேனநாயக்கா நேற்று நாடாளுமன்றத்தில் கூறினார்.

வேலை வாய்ப்பு திட்டமிடல் உதவி அமைச்சர் திரு. ரத்ன தேசப்பிரிய சேனநாயக்கா பேசியதாவது:—

"வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இலங்கைச் சரித்திரத்தில் முதல் தடவையாக ஒரு கமிட்டியை [illegible] இந்த அரசாங்கம்தான். அரசாங்கம் ஆட்சியைப் பொறுப்பேற்று 1½ மாத காலத்தில் இந்தக் கமிட்டி நியமிக்கப்பட்டது.

### 8000 பட்டதாரிகள்

"பட்டதாரிகளுக்குப் பயிற்சி அளிக்கும் திட்டத்தின் கீழ் 3,700 பேருக்குத் தற்போது பயிற்சி அளிக்கப்பட்டது. அத்துடன் 500 பேர் பகுதி நேர வேலையாளராகவும் கடமையாற்றுகின்றனர். எல்லாமாகச் சேர்ந்து சுமார் 8000 பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு அளிப்பது என்பது எமது எண்ணமாகும்.

"சுமார் 14,000 பட்டதாரிகள் வேலை இல்லாமல் இருந்தனர். இவர்களில் எவருக்காவது முந்திய அரசாங்கம் எந்தவித நியமனத்தையும் வழங்கவில்லை. கடந்த 9 மாதங்களில் 20,221 பேருக்கு நாம் பல்வேறு விதத்திலும் நியமனங்களை வழங்கி உள்ளோம்" என்றார். (ஐ)

## வெசாக் திருநாளில் யுத்த நிறுத்தம்

"வெசாக் தினத்தில் யுத்த நிறுத்தம் செய்ய வேண்டும் எனவும், கருணை காட்ட வேண்டும் எனவும் ஹபராதுவ பிரதிநிதி கூறினார். அப்படிக் கருணை காட்டவும், சண்டையை நிறுத்தவும் இருதரப்பாரும் முன்வர வேண்டும். அப்படிச் செய்யப் பயங்கரவாதிகள் தயாரா? அவர்களுடன் இது விடயத்தில் பேச்சுவார்த்தை நடத்த ஹபராதுவ பிரதிநிதி தயாரா?"

மத்திய கொழும்பு முதலாவது உறுப்பினர் திரு. ஆர். பிரேமதாச நேற்று நாடாளுமன்றத்தில் இப்படிக் கேட்டார்.

இக் கட்டத்தில் ஹபராதுவ பிரதிநிதிக்கும் , கொழும்பு மத்திய தொகுதி உறுப்பினருக்குமிடையில் வாக்குவாதம் ஏற்பட்டது. சபாநாயகர் குறுக்கிட்டு அமைதியை நிலை நாட்டினார்.

## 139·9

ஏப்ரல் மாதத்துக்கு உரிய வாழ்க்கைச் செலவுப் புள்ளி 139.9 ஆகும். இது கடந்த மாதத்தைவிட 0.6 புள்ளிகளால் அதிகரித்து உள்ளது.

## ஊரடங்குச் சட்ட நேரம்

கொழும்பு, மே. 7

ஊரடங்குச் சட்டம் நாடு பூராவிலும் இன்று மாலை 7-30 மணி முதல் நாளை காலை 4-30 மணி வரையில் அமுலில் இருக்கும்.

## கொழும்பு — காங்கேசன்துறை: இரு விசேஷ ரயில்கள்

கொழும்புக்கும் காங்கேசன்துறைக்கும் இடையில், நாளையும் 10-ந் திகதியும் இரு விசேட ரயில்கள் ஓடும்.

ரயில்வேத் திணைக்களம் இதற்கான ஒழுங்குகளைச் செய்து உள்ளது.

நாளை 8-ந் திகதி சனிக்கிழமை காலை 6-45 மணிக்குக் கொழும்புக் கோட்டையிலிருந்து புறப்படும் விசேட ரயில், மாலை 2-58 மணிக்குக் காங்கேசன்துறையைச் சென்றடையும்.

10-ந் திகதி திங்கட்கிழமை காலை 7-55க்கு காங்கேசன்துறையில் இருந்து புறப்படும் விசேட ரயில், மாலை 4-32க்குக் கொழும்புக் கோட்டையை வந்தடையும்.

இந்த இரு விசேட ரயில்களும் வெயாங்கொடை, பொல்காவலை, மாகோ, அநுராதபுரம், மதவாச்சி, வவுனியா, மாங்குளம், கிளிநொச்சி, பரந்தன், பளை, கொடிகாமம், சாவகச்சேரி, நாவற்குளி, யாழ்ப்பாணம், கோண்டாவில், சுன்னாகம், ஆகிய ரயில் நிலையங்களில் மாத்திரம் தரித்துச் செல்லும். (ஐ–15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுடன் கதைக்காத காரணம் தான் என்ன?

## அவள் கையை இவர் பற்ற 'ஐயோ' என்றுள் தங்கை

"ஏன் நீ என்னுடன் கதைக்காமல் இருக்கிறாய்?" என மிகவும் அன்பாக அவள் கையைப் பிடித்து அருகில் இழுத்தபடி நான் கேட்டேன். அதைப் பார்த்த அவள் தங்கை ஐயோ அக்காவுக்கு அடிக்கிறார் எனச் சத்தமிட்டாள்."

கொழும்பு பிரதம மாஜிஸ்திரேட் முன்னிலையில் நடைபெற்ற தாபரிப்பு வழக்கொன்றின்போது மேற்கண்டவாறு கூறினார் எதிர் மனுதாரான ஒரு பிள்ளையின் தகப்பனான விக்ரமரத்ன என்பவர்.

இந்தத் தாபரிப்பு வழக்கில் வத்தளை, மாபோலையைச் சேர்ந்த மாலம்பகே ரஞ்சனி சிகேரா என்பவர் மனுதாரராகும். தன்னை மணமுடித்து பின்னர் கைவிட்ட சொந்தக் கணவரிடமிருந்து மாதா மாதம் தாபரிப்பு பணமாக நூறு ரூபா பெற்றுத் தருமாறு கோரி நீதிமன்றத்தில் மனுதார் வழக்குத் தொடர்ந்திருந்தார்.

வழக்கு விசாரணையின் ஆரம்பத்தில் மனைவியை பொறுப்பேற்கத் தாம் தயார் என்றும், அவளைப் பொறுப்பேற்றதில் நன்றாக கவனிப்பதாகவும் எதிர் மனுதாரர் கூறினார்.

"ஆம், நானும் அவருடன் சேர்ந்து வாழத் தயார். ஆனால் அவர் வேறு வீடு எடுக்க வேண்டும். அவரது பெரிய வீட்டுக்குப் போக என்னால் முடியாது. அவரது தாயார் மிகவும் கடுமையானவர்" இப்படி நிபந்தனை விதித்தார் மனுதார்.

மனுதாரின் நிபந்தனைக்கு எதிர் மனுதார் சம்மதிக்கவில்லை. எனவே வழக்கை விசாரணைக்கு விட்டார் மாஜிஸ்திரேட்.

விசாரணையின்போது மனுதார் சாட்சியமளிக்கையில் பின்வருமாறு கூறினார்:—

"எதிர் மனுதார் எனது சொந்தக் கணவர். இரு வருடங்களுக்கு முன் நாம் மணமுடித்தோம். மணமுடித்ததும் அவரது சொந்த வீட்டுக்கு எதிர் மனுதார் கூட்டிச் சென்றார்.

"மணமுடிக்கும்போது அவருக்குத் தொழில் இருக்கவில்லை. பெற்றோர்தான் அவரை பரிபாலித்து வந்தனர். அவரது சகோதரருக்கும் வேலை இல்லை. மூன்று மாதங்கள் வரை நாம் சந்தோஷமாக இருந்தோம். பின்னர் தகராறு மூளத் தொடங்கியது.

"தகராறுகள் ஏற்பட காரணம் மாமிதான். அவர் என்னை அடிக்கடி ஏசுவார். துன்புறுத்தவும் செய்தார். மற்றவர்களும் துன்புறுத்தினர். எனது கணவரிடம் இவற்றைக் கூறினேன். ஆனால் மாறுதல் எதுவும் ஏற்படவில்லை.

"நான் கணவருடன் வாழச் சம்மதம். ஆனால் அவர் வேறு வீடு எடுக்க வேண்டும். வீட்டுக்கு வாடகை அவரால் கொடுக்க முடியாவிடில் எனது பெற்றோர் அதனைக் கொடுக்கத் தயாராக உள்ளார்கள்."

எதிர் மனுதாரின் வழக்கறிஞரின் குறுக்குக் கேள்விகளுக்கும் அவர் பதிலிறுத்தார்.

மேல் விசாரணையை மாஜிஸ்திரேட் மே 16-ம் திகதிவரை ஒத்தி வைத்தார். *(12)

## கைதி தற்கொலை

விதிக்கப்பட்ட அபராதத் தொகையை கட்டாததால் ஆறு வார காலம் சிறை சென்ற ஒருவர் வெலிக்கடை சிறைச்சாலையில் வைத்து தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டு உள்ளார்.

இந்த தகவல் இங்கிரிய ஹந்தலாங்கொட ஜே. பிரேமதாச என்னும் 42 வயது நிரம்பியவரின் மரண விசாரணையின்போது வெளியாகியது. ★ (12)

## காதலில் தோல்வி கண்ட வாலிபன் தற்கொலை

தனது அண்ணனின் மனைவியின் தங்கையை அவன் காதலித்தான். ஆனால் அவனது காதலுக்கு பெரியவர்கள் சம்மதம் தெரிவிக்கவில்லை. அதனால் மனவேதனையடைந்த அவன் தன்னுயிரை மாய்த்துக் கொண்டான்.

நில் வீதியைச் சேர்ந்த விவேகானந்த வீதியில் வசிக்கும் வாலிபர் ஒருவரே இவ்வாறு உயிரை மாய்த்துக் கொண்டவர் என்று சொல்லப் படுகிறது.

இந்த வாலிபரின் மரண விசாரணை கொழும்பு பெரியாஸ்பத்திரியில் நடந்தது.

இறந்துபோன வாலிபரின் சகோதரர், திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. எகர்டன் பி. வீரக்கோன் முன்னிலையில் சாட்சியமளிக்கையில் பின்வருமாறு கூறினார்.

"எனது தம்பி சுமார் நான்கு வருடங்களாக காதல் தொடர்பு கொண்டிருந்தான். அவன் அண்ணனுடைய மனைவியின் தங்கையையே காதலித்தான். அவன் அவளைத் திருமணம் செய்ய எதிர்பார்த்திருந்ததை நான் அறிவேன். எனினும் எமது பெற்றோர் அதற்கு எதிர்ப்பு காட்டினார்கள்.

"சம்பவம் நடைபெற்ற தினம், இந்த காதல் தொடர்பைக் கைவிடுமாறு நான் தம்பியை எச்சரித்தேன். எனது எச்சரிக்கைக்குப் பிறகு அவன் ஆழ்ந்த யோசனையில் மூழ்கியிருந்ததைக் கண்டேன்.

"சிறிது நேரத்தின் பின் வாந்தியெடுக்கும் சத்தம் கேட்டது. ஓடிப்போய் பார்த்தபோது அவன் விஷமருந்தியிருந்தது தெரிய வந்தது. எனினும் அது ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ள நேரமாதையால் அவனை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்ல முடியாமல் இருந்தது.

"வீட்டில் அவனுக்கு சிறுசிறு வைத்தியங்கள் செய்யப் பட்டன. மறுநாள் விடிந்ததும் உடனே ஆஸ்பத்திரிக்கு அவனை அழைத்துச் சென்றோம். அங்கு வைத்து அவனுக்கு சிகிச்சை அளிக்கப் பட்டது எனினும் அவன் இறந்து விட்டான்."

இது தற்கொலைச் சம்பவமென திடீர் மரண விசாரணை அதிகாரி தீர்ப்பளித்தார். ★ (12)

## மைத்துனர் இருவரையும் குத்துவதைக் கண்டேன்

"சந்தேக நபர் வீட்டிற்குள் இருந்து ஓடி வந்து எனது மைத்துனர்கள் இருவரையும் கத்தியால் குத்தினர். குத்திவிட்டுத் தனது வீட்டுக்குள் ஓடி கதவை சாத்திக் கொண்டார்.

கொழும்பு திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. எகொர்டன் பீ. வீரக்கோன் நடத்திய மரண விசாரணை யொன்றின்போது, சாட்சியமளிக்கையில் அனிநோனா என்ற பெண் மேற்கண்டவாறு கூறினாள்.

இவ் விசாரணையின்போது கே. அனிநோனா சாட்சியமளிக்கையில் மேலும் கூறியதாவது:—

"சம்பவம் நடந்த தினம் மாலை 2.30 மணிபோல் காலஞ்சென்ற ஆரியதாச எனது வீட்டிற்கு வந்தான். எமது வீட்டிலிருந்து ஆரியதாசா திரும்பிச் செல்கையில் சந்தேக நபரான பியதாசாவுடன் வாக்குவாதம் செய்ய நேர்ந்தது.

"இவர்கள் ஒருவரை ஒருவர் எதிர்த்து வாதாடுவதைக் கண்ட நான் அவ்விடத்திற்குச் சென்றேன். சண்டையை நிறுத்திவிட்டு ஆரியதாசாவை எனது வீட்டிற்குக் கூட்டிச் சென்றேன்.

"சந்தேக நபரான பியதாசாவின் வீட்டுக்கு அண்மையில் வருகையில் ஆரியதாசா சந்தேக நபரை ஏசத் தொடங்கினர். அச்சமயம் வீட்டினுள்ளிருந்து ஓடி வந்த சந்தேக நபர் ஆரியதாசாவின் முதுகில் கத்தியால் குத்தினான். ஐயோ! எனக்குக் கத்தியால் குத்திவிட்டார்கள் என்று அலறியவாறு ஆரியதாச ஓடினான்.

"இதே வேளையில் காலஞ்சென்ற நிமலதாசாவும் அவ்விடத்திற்கு வந்தான். பியதாசவின் கையிலிருந்த கத்தியால், நிமலதாசவின் நெஞ்சில் குத்துவதை நான் கண்டேன்.

"சந்தேக நபர் அதன் பின்னர் தனது வீட்டுக்கு ஓடிச் சென்று கதவைச் சாத்துவதையும் நான் கண்டேன்.

"சிறிது நேரத்தின் பின்னர் என்ன நடந்தது என்பதை அறியும் முகமாக வெளியில் வந்தேன். வருகையில் அழகேஸ்வர வீதியில் ஆரியதாசாவும், நிமலதாசாவும் புல் தரையில் கிடத்துப் பட்டிருப்பதைக் கண்டேன்" எனக் கூறினார்.

இது ஒரு கொலைச் சம்பவம் என்று குறிப்பிட்ட மரண விசாரணை அதிகாரி சந்தேக நபரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். ★ (4)

## தொழிலாளி மரணமானார்

மாத்தளை, மே 2

தேயிலைத் தொழிற்சாலையில் உள்ள மின்சாரக் கம்பி தாக்கியதால் 25 வயதுடைய தோட்டத் தொழிலாளி ஒருவர் பரிதாபகரமாக மரணமுடைந்த சம்பவம் ஒன்று இரத்தோட்டை தோர்தற் தொகுதியிலுள்ள உக்குவளை என்னுமிடத்தில் நடைபெற்றுள்ளது. (271)

## பூண்டோடு அழிக்குக

ஈழமணித் திருநாடாம் இலங்கை மாதாவின் இளைஞர் சமுதாயம், தவறான வழிநடத்தலுக்கு இலக்காகிச் சீர்குலைந்து, சரியான வழி தெரியாது, திரிசங்கு சொர்க்க நிலையில் இன்று தவிக்கிறது.

இந்த இளைஞர் சமுதாயத்திற்கு புனர் வாழ்வு அளித்து நெறிப்படுத்த அரசு முன் வந்திருக்கிறது. ஈழமாதாவின் புதல்வர்களைக் குட்டிச்சுவர் ஆக்கியவர்கள் யார்?, அவர்களுக்கு வாழ்வு அளிப்பது எப்படி? என்பன பற்றி அரசாங்கம் சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டியதும் அவசியமாகும்.

மற்றவர்களின் தவறான வழி நடத்தலுக்கு ஆளானவர்களை மட்டும் நல்வழிப் படுத்தி விடுவதால் வன்செயல்களுக்கும் ஜனநாயக விரோத செயல்களுக்கும் முற்றுப்புள்ளி வைத்து விட முடியாது. அட்டூழியங்கள் நடை பெறுவதற்கு மூலகர்த்தாக்களாக விளங்கும் பேர்வழிகளைக் கண்டு பிடித்து தண்டிப்பதன் மூலமே பயங்கரவாத இயக்கத்தை பூண்டோடு அழிக்க முடியும்.

தந்தி

## பிறர் கூப்பன் வைத்திருந்த பெண்ணுக்கு அபராதம்

பத்தொன்பது அரிசிப் பங்கீட்டுப் புத்தகங்களுடன் பொலீசாரிடம் சிக்கிய பெண்மணி ஒருவர் வெலிக்கடைப் பொலீசாரால் கைது செய்யப்பட்டு, கொழும்பு மேலதிக நீதவான் திரு. நந்த விஜேசேகர முன்னிலையில் ஆஜர் செய்யப் பட்டார்.

தனது வீட்டில் வசிக்காதவர்களுக்குச் சொந்தமான பத்தொன்பது அரிசி பங்கீட்டுப் புத்தகங்களை வைத்திருந்து, உணவுக் கட்டுப்பாட்டு சட்டத்தை மீறியதாக இவர் மீது குற்றம் சுமத்தப் பட்டது. அசலின் நோனா என்னும் இப்பெண் இராஜகிரிய பகுதியைச் சேர்ந்தவர்.

அசலின் நோனா குற்றத்தை ஒப்புக் கொண்டார்.

பிரதிவாதியின் சார்பில் ஆஜரான வழக்கறிஞர், இப்பெண் "றெடி மேட்" ஆடைகள் தைத்து விற்பவரெனவும் அதற்கு துணி எடுக்கவே இந்த பங்கீட்டுப் புத்தகங்களை கொண்டு வந்தாரெனவும், கள்ளத்தனமாக உணவுப் பொருட்களை எடுக்கும் நோக்கம் இவருக்கில்லை எனவும் கூறினர்.

இனிமேல் இத்தகைய செயல்களில் ஈடுபட்டால் சிறைத் தண்டனை கிடைக்குமென நீதவான் பிரதிவாதியை எச்சரித்து, ஒரு வருடத்துக்கு 350 ரூபா பிணையில் செல்ல அனுமதித்து, முடிக்குரிய செலவாக 50 ரூபா கட்டும்படியும் உத்தரவிட்டார். ★ (129–ச)


## கைமேல் பலன்!

விவாகம் நடைபெற, தொடியவர்களை அடக்க, வேண்டியவர்களை வசியமாக்க, வேண்டாதவர்களை ஒதுக்க, கணவன் மனைவி பிணக்குகள் நீங்க, வியாபாரம் முன்னேற்றமுடைய ஆகியவற்றிற்கு மந்திரம் செய்து தருவேன். விபரங்களுக்கு எழுதவும்.

**பி. எம். திசாநாயக்க**

103, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, மருதானை. தொ. பே. 33955.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கள்ளக் காதலனுடன்

# அம்மணக் கோலத்தில் அழகி அவள் சல்லாபம்

## கணவன் பொலீஸ் செல்ல காரிகை கம்பிநீட்டல்

**பழுதடைந்த மின் இணைப்புகளைப் பொருத்துவதற்கு என ஒரு மின்சார வல்லுனரைத் தன் வீட்டுக்கு அழைத்து வந்தாள் திருமணம் செய்து கொண்ட ஒரு பெண். அவர்தான் அவளது கள்ளக் காதலன். மின்சாரம் கொடுக்க வந்த அவர் அங்கே சில காலம் சஞ்சாரம் செய்து தனது காதலியையும் கூட்டிக் கொண்டு கம்பி நீட்டினர்.**

அவளுக்கு ரிக்ஸி என்று பெயர். அவரது பெயர் எடி என்பதாகும்.

ரிக்ஸியின் அழகுக்கு மட்டும் குறைவில்லை. ஆனால் அவளுடைய தாம்பத்திய வாழ்க்கைதான் நிறைவில்லாமல் இருந்தது.

பேர்ட் ராம் என்ற வங்கி லிகிதரைத் திருமணம் செய்து கொண்ட அவள் தன்னுடைய சொத்துக்களை எல்லாம் அவருக்குக் காட்டினள். ஆனால் அவற்றைச் சரியான முறையில் பயன்படுத்தி இன்பம் அனுபவிக்க அவருக்குத் தெரியவில்லை.

தன்னுடைய கணவர் வங்கிக் கணக்குகளில் திறமைசாலியாக இருந்தாலும் கட்டில் அனுபவம் அற்றவர் என்பதை ரிக்ஸி வெகு இலகுவாக உணர்ந்து கொண்டாள்.

அவளின் பருவ உணர்வுகளுக்குப் பதமான உணவு கொடுக்க ஆடவன் ஒருவனின் துணை அவளுக்குத் தேவைப்பட்டது. இந்த நேரத்தில்தான் எடியின் நட்பு அவளுக்குக் கிடைத்தது.

தண்ணீரைக் கண்ட அன்னங்கள் அதற்குள் இறங்குவது போல எடியும் ரிக்ஸியும் முதல் சந்திப்பிலேயே காதல் தடாகத்திற்குள் இறங்கி விட்டனர்.

பேர்ட் ராம், வீட்டில் இல்லாத நேரங்களில் ரிக்ஸியிடம் வந்து போகத் தொடங்கினர் எடி. மின்சார வல்லுனர் அவளிடம் வரும் போதெல்லாம் புதுவகை மின்சாரம் இருவரின் உடல்களின் ஊடே பாய்ந்து சென்றது. அவர் வரும் போது அவளின் முகத்திலே ஒளி பிறக்கும். அவர் சென்ற பின் அந்த ஒளி மறையும்.

ஒரு நாள் வீட்டின் மின் இணைப்புகளில் பழுது ஏற்பட்டு விட்டது. அவற்றைத் திருத்துவதற்கு பேர்ட் ராம் முயன்றார், முடியவில்லை. ரிக்ஸி கிடைத்த சந்தர்ப்பத்தை நழுவ விடவில்லை. எடியை அழைத்து வந்தாள். அவர் பழுது எங்கே இருக்கிறது என்பதை பேர்ட் ராமுக்குக் காட்டினர்.

அன்று இரவு எடி அங்கேயே தங்கினர். மறுநாள் காலை வேலைக்குச் சென்ற போது அந்த வீட்டில் பழுதடைந்த தையல் மெஷின் ஒன்றைத் திருத்திக் கொடுக்க மாலை வருவதாகக் கூறிச் சென்றார்.

ஆனல் உள்ளத் துடிப்பை வெற்றி கொள்ள அவரால் முடியவில்லை. அன்று மத்தியானமே வீட்டுக்கு வந்து விட்டார்.

பல வாரங்கள் கடந்தன. எடி வீட்டில் பழுதடைந்து இருந்தவற்றைத் திருத்துவதற்கென அங்கேயே தங்கினர்.

பேர்ட் ராமுக்குப் பேரதிர்ச்சி ஒன்று காத்திருந்தது. வழக்கத்துக்கு மாருக வீட்டுக்கு வர வேண்டிய நேரத்துக்கு முன் ஒரு நாள் வந்தார்.

கதவுகள் பூட்டப்பட்டிருந்தன. என்றாலும் வீட்டுக்குள் ஒருவாறு நுழைந்தார். அவர் மெதுவாக அறைக்குள் சென்று பார்த்த போது அம்மணக் கோலத்தில் தன்னுடைய மனைவியும் மின்சார வல்லுனரும் ஒருவருக்கொருவர் மின்சார விநியோகம் செய்து கொண்டிருப்பதைக் கண்டார்.

பேர்ட் ராம் பொலீஸ் நிலையத்துக்கு ஓடினர். கள்ளக் காதலர்கள் வீட்டை விட்டே கம்பி நீட்டினர்.

பேர்ட் ராம் அதன் பின் ரிக்ஸியை கோர்ட்டில் தான் சந்தித்தார். தன்னுடைய உடைமைகளை கொடுக்க மறுப்பதாக பேர்ட் ராம் மீது குற்றஞ்சாட்டி அவள் தாக்கல் செய்திருந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதுதான் இந்தச் சந்திப்பும் நிகழ்ந்தது.

பேர்ட் ராமுடன் நடத்திய வாழ்க்கை சகிக்க முடியாது இருந்தது என்று கோர்ட்டில் கூறினள் ரிக்ஸி.

அவளுக்குச் சேர வேண்டிய பொருள்களை கொடுத்து விடுமாறு கோர்ட்டில் பேர்ட் ராமுக்கு உத்தரவிட்டார் வழக்கை விசாரணை செய்த நீதியரசர். *(8)

## சரணகதி அடைந்த பயங்கரவாதிகள்

அரசாங்கம் வழங்கிய நான்கு நாள் அவகாசத்தில், இதுவரை சரணகதி அடைந்தோரின் தொகை 3,188 எனத் தகவல், ஒலிபரப்பு அமைச்சு தெரிவித்து உள்ளது.

பல பாகங்களிலும் இருந்து தற்காலிகமாக கிடைக்கப்பெற்ற விபரங்களில் இருந்தே இத் தொகை கணக்கிடப்பட்டுள்ளது.

சரண் அடைந்த பயங்கரவாதிகள் அனைவரும், கொழும்பிலுள்ள வித்தியோதய பல்கலைக்கழக புனர் வாழ்வு நிலையத்திற்குக் கொண்டு வரப்பட்டு பதிவு செய்யப்படுவர். அதன் பின்பே சரணகதி அடைந்தோரின் தொகை எவ்வளவு என்பது நிச்சயமாகக் கூற முடியுமென தகவல் அமைச்சு அதிகாரி ஒருவர் கூறினர்.

சரணகதி அடைவதற்கான கடைசி நாளன்று 1454 பேர் சரணகதி அடைந்ததாகக் கூறப்பட்டது.

கேகாலை மாவட்டத்தில் ஆகக் கூடுதலாக, 396 பேர் சரணகதி அடைந்தனர்.

அநுராதபுரத்தில் 132 பேர், பதுளையில் 4, மாத்தறையில் 93 பேர், காலியில் 92 பேர், மாத்தளையில் 53 பேர், இரத்தினபுரியில் 41 பேர், மொனராகலையில் 47 பேர், ஹம்பாந்தோட்டையில் 18 பேர், பதுளையில் 38 பேர், களுத்துறையில் 21 பேர், மற்றும் பொலன்னறுவை, புத்தளம், நுவரெலியா, கொழும்பு ஆகியாமிடங்களிலும் கடைசி நாளன்று பலர் சரணடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

நாட்டின் பல பாகங்களிலும் சரணகதி அடைந்தோரை கொழும்பிலுள்ள வித்தியோதய பல்கலைக் கழகத்திற்குக் கொண்டுவர துரித ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன (15)

## பிரார்த்தனையில் ஈடுபடுக; சர்வமத வேண்டுகோள்

வெசாக் பண்டிகை, மீலாத் தினக் கொண்டாட்டங்களின் போது சர்வ மதங்களும் போதித்துள்ள நற் போதனைகளைக் கடைப் பிடித்து, பிரார்த்தனையில் ஈடுபடுமாறு சர்வ மத காங்கிரஸ் வேண்டுகோள் விடுத்துள்ளது.

புத்த பகவான் போதித்த அன்பு, கருணை, இஸ்லாம் போதித்துள்ள சகோதரத்துவம், ஒற்றுமை ஆகியன இன்றைய கால கட்டத்திற்கு ஏற்ற மிக முக்கியமான நற்போதனைகள் என சர்வ மத காங்கிரஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

"இன்று நாட்டில் அமைதியற்ற ஒரு நிலை உருவாகியுள்ளது. இவ் வேளையில் சர்வ மதங்கள் போதிக்கும் நல்ல இலட்சியங்கள் எமது உள்ளத்தில் இடம் பெற வேண்டும்.

"இந்நாட்டில் சாந்தி, சமாதானம் நிலவி, மக்களிடையே ஒற்றுமை, சகோதரத்துவம் ஏற்பட எல்லோரும் பிரார்த்தனையில் ஈடுபட வேண்டும்" எனவும் சர்வ மத காங்கிரஸ் வேண்டுகோளில் குறிப்பிடப்பட்டுள்ளது. (15)

## ஊரடங்கு நேரத்தில் ஊர்வலம் வந்த ஜோடி

கடந்த சில தினங்களாக கல்கிசை, வெள்ளவத்தை, தெஹிவலை, பம்பலப்பிட்டி, மிரிஹானை, மஹரகம, கொஹுவல பகுதிகளில் பொலீஸாரால் கைது செய்யப்பட்ட இளைஞர்கள் பலர், கொழும்பு தெற்கு மாஜிஸ்திரேட் திரு. ஜோர்ஜ் அத்துருபான முன்னிலையில் ஆஜராக்கப் பட்டனர்.

இச் சந்தேக நபர்களிடமிருந்து பெருமளவில் கைக்குண்டுகள், பிரசுரங்கள், இராணுவ பூட்ஸ், தும்பிகள் ஆகியவை கைப்பற்றப்பட்டுள்ளன.

ஊரடங்குச் சட்டத்தை மீறி வீதியில் திரிந்த குற்றச் சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு ரிமாண்டில் வைக்கப்பட்டிருந்த சிலரும் மாஜிஸ்திரேட் முன்னிலையில் ஆஜராக்கப்பட்டனர்.

ஊரடங்குச் சட்டத்தை மீறி வீதியில் சுற்றித் திரிந்ததாக ஒரு இளம் காதல் ஜோடியையும் பொலீஸார் கைது செய்துள்ளனர். * (4)

## ஒரு இலட்சம் ரூபா நன்கொடை வழங்கினர்

இலங்கைப் போக்குவரத்துச் சபை ஊழியர்கள், அரசாங்க நிவாரண நிதிக்கு ஒரு லட்சம் ரூபா நன்கொடை வழங்கியுள்ளனர்.

இத் தொகை அடங்கிய காசோலை ஒன்றை இ. போ. ச. தலைவர் திறைசேரியில் ஒப்படைத்தார்.

இந்த ஒரு லட்சம் ரூபாயை விட, மேலும் சேர்த்துக் கொடுப்பதென ஊழியர் முடிவு செய்துள்ளனர்.

இ. போ. ச.விலுள்ள சில ஊழியர்கள் தமது ஒரு மாதச் சம்பளத்தையும் கொடுக்க முன்வந்துள்ளனர். மற்றும் சிலர் ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு நாள் சம்பளத்தைக் கொடுக்கத் தீர்மானித்துள்ளனர்.

பயங்கரவாதிகளால் தாக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு உதவவே அரசாங்கம் நிவாரண நிதியை ஆரம்பித்துள்ளது. (15)

## தொழிலாளர் நன்மை அடைந்தனர்

பிரசவ சகாயக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கடந்த வருடம் 32,908 பெண் தொழிலாளர்கள் நன்மையடைந்துள்ளனர்.

இத்தகவலை தொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனால் அரசாங்கத்திற்கு 20,84,981 ரூபா செலவாகியுள்ளதாக அமைச்சு மேலும் அறிவித்தது. (எ-3)

## பத்திரிகை அலுவலகம் முன் பத்தினிகள் ஆர்ப்பாட்டம்

பெண்களின் கௌரவத்தைக் காக்கப் போராடுவதாகக் கூறிக் கொள்ளும் 35 பேர் "பிளேபாய்" பத்திரிகை அலுவலகத்தின் மீது படையெடுத்துத் தோல்வி கண்டனர்.

அந்த வீராங்கனைகள் அப் பத்திரிகையிலிருந்து காமப் பேரின்பம் பற்றிய தெளிவான வேடிக்கையான உண்மைகள், "1970-ல் ஒரு பெண் கன்னியாக இருந்து தலை நிமிர்ந்து வாழ முடியுமா?" என்பது போன்ற கட்டுரைகளின் பகுதிகளைப் படித்தனர்.

அலுவலகக் கட்டிடத்திற்கு வெளியிலுள்ள ஜன நடமாட்டம் நிரம்பிய நடை பாதையில் அவர்கள் ஒலி பெருக்கியை வைத்துக் கொண்டு சத்தமிட்டனர்.

அவர்கள் இரண்டு மணி நேர ஆர்ப்பாட்டம் நடத்திய பிறகு அவர்களைக் கலைந்து போகுமாறு பொலீசார் கேட்டுக் கொண்டனர்.

அவர்கள் அதை எல்லாம் கேட்பதாகத் தெரியவில்லை. சிலர், குப்பைகளை அள்ளி வந்து கட்டிடத்துக்குள் வீச முனைந்தனர். அவர்களைக் கட்டிடத்திற்குள் நுழைய விடாமல் இரண்டு நாட்களாகப் பொலீசார் தடுத்தனர்.

பெண்களைக் காமக் கலியாட்டப் பொருள்களென மட்டமாக்கிக்காட்டும் விளம்பரங்களையும் காமக் கட்டுரைகளையும் பத்திரிகை உடனடியாக நிறுத்தி விட வேண்டுமென்றும் பெண்களைத் தனது சுரண்டலுக்குப் பயன்படுத்துவதற்காக அப்பத்திரிகை 45000 மலேசிய வெள்ளிக்குச் சமமான தொகையை நஷ்ட ஈடாக கொடுக்க வேண்டும் என்றும் இவ் வீராங்கனைகள் கோரி உள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரணடையாதோருடன்

# சமர் செய்ய முஸ்தீபு!

## அவகாசம் முடிந்தாலும் அரசு கருணை காட்டும்

பயங்கரவாதிகள் மறைந்து வாழும் இடங்களைத் தாக்குவதற்கு பாதுகாப்புப் படையினர் துயராகி வருகின்றனர்.

சரணாகதி அடையாமல், பல பாகங்களிலும் மறைந்து இருந்து மக்களுக்கும் பொதுச் சொத்துக்களுக்கும் நாசம் விளைத்து வரும் பயங்கரவாதிகளை ஒழித்துக் கட்டுவதே இராணுவத்தினர் மேற்கொள்ளும் முக்கிய கடமையாக இருக்கும்.

பெருந் தொகையான பயங்கரவாதிகள் சரணாகதி அடைந்ததையிட்டு மகிழ்ச்சி அடைகிறோம் என இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கொடுக்கப்பட்ட அவகாசம் முடிந்து விட்ட போதிலும், சரணாகதி அடைவோரை மேலும் ஏற்றுக் கொள்ளும்படி சகல பொலீஸ் நிலையங்கள், இராணுவ முகாம்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என பாதுகாப்பு, வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இம்மாதம் முதலாந் திகதியில் இருந்து நாலாந் திகதி வரை சரணடைந்த பயங்கரவாதிகளைத் தரப்படுத்தி, புனர்வாழ்வு அளிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

சரணடைந்த அனைவரையும் குங்கொடவிலையிலுள்ள வித்தியோதய பல்கலைக் கழக வளவிற்குக் கொண்டு வந்து, விசாரணை செய்து, அவர்கள் தரப்படுத்தப்படுவார்கள் என தகவல் ஒலிபரப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

நீர்ப்பாசன, மின்சக்தி பெருந்தெருக்கள் அமைச்சர் திரு. மைத்திரிபால சேனநாயக்கா தலைமையிலான புனர்வாழ்வுக் கமிட்டி நேற்றுக் காலை கூடி, புனர்வாழ்வு அளிக்கும் விடயமாக ஆராய்ந்தது. இத்தோடு சம்பந்தப்பட்ட சகல அதிகாரிகளும் இக்கூட்டத்தில் பங்குபற்றினர் என அறிவிக்கப்பட்டது.

எஞ்சியிருக்கும் பயங்கரவாதிகள் குறிப்பிட்ட சில பகுதிகளிலேயே தமது ஆதிக்கத்தை நிலைநாட்ட முயற்சிக்கின்றனர். தமது அணியிலிருந்து சிதறுண்டவர்கள் ஒன்று சேர முயல்வதையும் அவதானிக்கக் கூடியதாய் உள்ளது என இராணுவ வட்டாரம் இன்றைய நிலை பற்றி அபிப்பிராயம் கூறியது. (15)

## சுவீப் முடிவுகள்

கொழும்பு, மே 7.

ஏப்ரல் 24-ந் திகதி நடைபெற இருந்த தேசிய லொத்தர் சபையின் 345-வது சுவீப் சீட்டிழுப்பு நேற்று மாலை கொழும்பில் நடைபெற்றது.

இந்தச் சீட்டிழுப்பில் முதல் மூன்று பரிசுகளையும் பெறும் டிக்கெட்டுகளின் விபரம் வருமாறு:—

முதலாம் பரிசு

**21 K 0777**

ரூபா 49,750

இரண்டாம் பரிசு

**06 C 0344**

ரூபா 19,900

மூன்றும் பரிசு

**07 Q 0943**

ரூபா 4,975

தலா ரூபா 248.75 ஆறுதல் பரிசு பெறும் 100 டிக்கட்டுகளின் விபரம் வருமாறு:—

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | A | | | |
| | | | 04 A 0063 | | | |
| | | | B | | | |
| 17 | B | 0850 | | 10 | B | 0491 |
| 20 | B | 0019 | | 07 | B | 0260 |
| 01 | B | 0714 | | 08 | B | 0427 |
| | | | C | | | |
| 19 | C | 0076 | | 08 | C | 0260 |
| 05 | C | 0313 | | 24 | C | 0630 |
| | | | D | | | |
| 23 | D | 0129 | | 12 | D | 0269 |
| | | | 24 D 0213 | | | |
| | | | E | | | |
| 20 | E | 0160 | | 19 | E | 0332 |
| 15 | E | 0897 | | 10 | E | 0124 |
| | | | F | | | |
| | | | 22 F 0265 | | | |
| | | | G | | | |
| 16 | G | 0354 | | 10 | G | 0231 |
| 11 | G | 0472 | | 07 | G | 0142 |
| 24 | G | 0096 | | 19 | G | 0918 |
| | | | H | | | |
| 07 | H | 0114 | | 03 | H | 0001 |
| 18 | H | 0598 | | 23 | H | 0726 |
| 09 | H | 0584 | | 10 | H | 0180 |
| | | | J | | | |
| | | | 10 J 0657 | | | |
| | | | K | | | |
| 19 | K | 0015 | | 20 | K | 0041 |
| 19 | K | 0056 | | 05 | K | 0711 |
| | | | L | | | |
| 14 | L | 0868 | | 10 | L | 0095 |
| 15 | L | 0314 | | 20 | L | 0519 |
| | | | M | | | |
| 24 | M | 0452 | | 02 | M | 0463 |
| 04 | M | 0234 | | 18 | M | 0441 |
| 16 | M | 0854 | | 05 | M | 0767 |
| | | | N | | | |
| 05 | N | 0353 | | 12 | N | 0723 |
| 21 | N | 0082 | | 19 | N | 0166 |
| | | | O | | | |
| 03 | O | 0919 | | 08 | O | 0809 |
| 05 | O | 0803 | | 18 | O | 0032 |
| | | | P | | | |
| 04 | P | 0337 | | 09 | P | 0485 |
| 01 | P | 0909 | | 07 | P | 0340 |
| | | | Q | | | |
| 03 | Q | 0624 | | 07 | Q | 0196 |
| | | | 07 Q 0100 | | | |
| | | | R | | | |
| 20 | R | 0317 | | 22 | R | 0519 |
| 21 | R | 0497 | | 14 | R | 0326 |
| 03 | R | 0096 | | 08 | R | 0063 |
| | | | S | | | |
| 06 | S | 0222 | | 13 | S | 0203 |
| 12 | S | 0017 | | 09 | S | 0283 |
| 05 | S | 0188 | | 04 | S | 0287 |
| | | | T | | | |
| 24 | T | 0597 | | 19 | T | 0289 |
| 01 | T | 0739 | | 09 | T | 0630 |
| | | | 21 T 0555 | | | |
| | | | U | | | |
| 17 | U | 0840 | | 05 | U | 0486 |
| | | | 24 U 0832 | | | |
| | | | V | | | |
| 22 | V | 0021 | | 10 | V | 0540 |
| | | | W | | | |
| 05 | W | 0005 | | 18 | W | 0810 |
| 07 | W | 0135 | | 05 | W | 0257 |
| 07 | W | 0349 | | 23 | W | 0238 |
| | | | 14 W 0359 | | | |
| | | | X | | | |
| 04 | X | 0204 | | 18 | X | 0587 |
| 02 | X | 0101 | | 19 | X | 0358 |
| | | | Y | | | |
| 05 | Y | 0425 | | 07 | Y | 0243 |
| | | | 10 Y 0977 | | | |
| | | | Z | | | |
| 07 | Z | 0781 | | 05 | Z | 0955 |
| | | | 20 Z 0062 | | | |

## மகாபலிபுரத்தில் ஒலி-ஒளி அமைப்பு

மதுரை, மே 6

"மகாபலிபுரத்தில் நவீன ஒலி, ஒளி அமைப்பு ஏற்படுத்தப்படும்" என்று தமிழக முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி கூறியுள்ளார்.

பத்திரிகையாளர் மத்தியில் பேசுகையில் திரு. கருணாநிதி மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

## தாக்கப்படவில்லையாம்

சிலாபம், மே 6

சிலாபம், மாதம்பை பகுதி பொலீஸ் நிலையங்கள் பயங்கரவாதிகளின் தாக்குதல்களுக்கு இலக்காகவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இப் பகுதிகளில் வேலைகள் யாவும் வழமை போல் நடைபெற்று வருவதாகவும் கூறப்படுகிறது.

சிலாபப் பொலீஸ் கோஷ்டியொன்று இப் பகுதியில் அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் பொருட்டு இரவு பகலாக வீதிகளில் ரோந்து சுற்றுகிறதாம்.

பயங்கரவாதிகளின் நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் சிலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சிலாபம் நாடாளுமன்ற உறுப்பினரும் மீன்பிடிக் கடற் தொழில் உதவி அமைச்சருமான திரு. எஸ். டி. ஆர். ஜயரத்ன தனது தேர்தல் வட்டார தொகுதி எங்கும் சென்று மக்களை சந்தித்து தற்போது எழுந்துள்ள பிரச்சினைகளைப் பற்றி அவர்களுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தினார்.

பயங்கரவாதிகளால் அப் பகுதி வாசிகளுக்கு ஏதும் இடைஞ்சல்கள் ஏற்பட்டால் உடனே தமக்கு அறிவிக்குமாறும் திரு. ஜயரத்ன சிலாப வாசிகளிடம் வேண்டியுள்ளார். * (எ-4)

## தமிழக கவர்னர் பதவி ஏற்பு

சென்னை, மே 6

தமிழ்நாட்டின் புதிய கவர்னராக திரு. கே. கே. ஷா இம்மாதம் 18ம் திகதி பதவி ஏற்கிறார்.

திரு. ஷா, இந்திரா மந்திரி சபையில் அமைச்சராக இருந்தவர். தமிழ்நாடு கவர்னர் பதவிக்காக அமைச்சர் பதவியிலிருந்து அவர் விலகினார். (ம)

## துல்கிரியாச் சம்பவம் சந்தேகநபர் ரிமாண்டில்

துல்கிரிய நெசவாலையையும், வறக்காப்பொலை பொலீஸ் நிலையம் மற்றும் அரசாங்கக் கட்டிடங்களைத் தாக்கியதாகச் சந்தேகிக்கப்பட்ட பயங்கரவாதிகளின் தலைவர் ஒருவரை, துப்பறியும் பொலீஸார் நீதிமன்றத்தில் ஆஜராக்கினர்.

மீரிகமத்தைச் சேர்ந்த ஜே. ஏ. சந்திரிசிறி ஜயசூரியா என்னும் இவரை, இராணுவ அதிகாரி ஒருவர் கைது செய்து துப்பறியும் பொலீஸாரிடம் ஒப்படைத்தார்.

ஹிங்குராக்கொடை பொலீஸ் நிலையத்தைத் தாக்கியவர்களுள் ஒருவரெனச் சந்தேகிக்கப்பட்ட லாபிர் மொகம்மது நியாஸ் என்பவரையும் கொழும்பு பிரதம நீதவான் திரு. டி. ஈ. திரசேகரா முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

ஹிங்குராக்கொடையைச் சேர்ந்த நியாஸை இம்மாதம் 14-ந் திகதி வரை விளக்கமறியலில் வைத்து அன்றைய தினம் பொலன்னறுவை நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்யுமாறு உத்தரவிடப்பட்டது.

ஹன்வெலைப் பொலீஸ் நிலையத்தைத் தாக்கிய நால்வர், பயங்கரவாத இயக்கத்தில் சேர்ந்தவர்களெனச் சந்தேகிக்கப்பட்ட மற்றும் அறுவரும் பொலீஸாரால் பிரதம நீதவான் முன்னிலையில் ஆஜராக்கப்பட்டனர்.

சந்தேக நபர்கள் அனைவரையும் விளக்கமறியலில் வைத்து, அவரவர் வசிக்கும் பகுதிகளில் உள்ள நீதிமன்றங்களில் ஆஜர்படுத்துமாறு, நீதவான் கட்டளையிட்டார். *(15)

## நிறைவேறியது

தகவல் ஒலிபரப்பு அமைச்சர் திரு. ஆர். எஸ். பெரேரா திரைப்படக் கூட்டுத்தாபன மசோதாவை நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

பிரஸ்தாப மசோதா சகல நிலைகளிலும் நிறைவேறியது.


நல்ல தமிழ் எழுத வேண்டுமா?

இன்றே பெற்றுப் படியுங்கள்.

**பயிற்சித் தமிழ்**

— இரண்டு பாகங்கள் —

ஆசிரியர்:

தென்புலோலியூர், திரு. மு. கணபதிப்பிள்ளை அவர்கள்

தமிழில் மட்டுமன்றி ஆங்கிலத்திலும் பொருள் விளக்கங்கள் கொண்டது.

மாணவர்கள் - ஆசிரியர்கள் — எழுத்தாளர்கள் எல்லோரும் விரும்பிப் பயன்படுத்தி வருவது.

இலங்கையில் மட்டுமன்றி இந்தியா, மலேசியா முதலான வெளிநாடுகளிலும் மிகுதியும் பயன்படுத்தப் பெறுவது.

விலை ரூபா 5-00. அஞ்சற் செலவு -/50 சதம்.

**எம். டி. குணசேன அண்டு கொம்பனி லிமிற்றெட்.**

கொழும்பு - கண்டி - காலி - நீர்கொழும்பு அனுராதபுரம் - மாத்தறை - யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகையை அச்சிட்டவர் சுயாதீனப் பத்திரிகா சமாஜம், குணசேன மாவத்தை, கொழும்பு -12 (இலங்கை). வெளியிட்ட திகதி 7 மே 1971.

Gunasena Mawatha, Colombo—12, (Ceylon)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org